புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

===

# மாலை இலக்கியங்களில் அணிநயம்

===

**ஆய்வாளர்**
**ப. லாவண்யா**
(முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்),
நெறியாளர்: முனைவர்.நீ.காஞ்சனா,
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ்,கலை,அறிவியல் கல்லூரி,
மயிலம்-604304.

===

**ஆய்வுச்சுருக்கம்**

*அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களை உணர்த்தி மக்களை நன்னெறிப்படுத்தும் இலக்கியங்கள் பேரிலக்கியங்கள் ஆகும். உறுதிப் பொருள்கள் நான்கனுள் ஒன்றோ அல்லது சிலவோ குறைந்து பாடப்படின் அவை சிற்றிலக்கியங்கள் எனப்படும். சிற்றிலக்கியங்கள் பெரும்பான்மையாக நாயக்கர் காலத்தில் தோன்றியதால் சிற்றிலக்கிய காலத்தை 'நாயக்கர் காலம்' எனவும் அழைப்பர். சிற்றிலக்கியங்களுக்கு இலக்கணம் கூற பல பாட்டியல் நூல்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் சிற்றிலக்கிய வகைகளின் எண்ணிக்கையில் வேறுபாடுகள் நிலவுகிறது. சிற்றிலக்கியங்கள் 96 வகை என்பது பொதுவான கருத்தாகும். இத்தொண்ணூற்றாறு வகைகளுள் ஒன்றுதான் மாலை இலக்கியங்கள். சிவப்பிரகாசர் எழுதிய மாலை இலக்கியங்களில் காணப்படும் அணிகளை ஆய்வதாக இவ்வாய்வுச் சுருக்கம் அமைகிறது.*

**கருச்சொற்கள்**

*சிற்றிலக்கியம், சிவப்பிரகாச சுவாமிகள், பிட்சாடன நவமணி மாலை, நிரஞ்சன மாலை, கைத்தல மாலை, சோணசைல மாலை, நால்வர் நான்மணி மாலை, இட்டலிங்க அபிடேக மாலை, அணிகள்.*

**முன்னுரை**

*அணி என்ற சொல்லிற்கு சங்க இலக்கியங்கள் அழகு, அணிகலன்கள், ஆடை, ஒப்பனை என பல பொருண்மைகளை வழங்குகின்றது. அணி என்பது ஒன்றின் இயற்கை*

அழகை மேலும் மெருகூட்டுவதாகும். ஒரு நங்கைக்கு அணிகலன் எவ்விதம் அழகு சேர்க்கிறதோ அதுபோல செய்யுளுக்கு அழகு சேர்ப்பது அணியாகும். அணியிலக்கணத்திற்கு இலக்கணம் கூற பல நூல்கள் தோன்றியிருப்பின் அவற்றுள் இன்றியமையா நூலாக வலம் வருவது தண்டியலங்காரம் எனலாம்.

கவிஞர்கள் பெரும்பாலோர் பாக்கள் இயற்றும்போது தனது கற்பனைத் திறனுக்கு ஆதாரமாக பல அணிகளைப் பொருத்தி செய்யுளை இயற்றுகின்றனர். அவ்வகையில் சிற்றிலக்கிய வேந்தர், கற்பனைக் களஞ்சியம் என்ற சிறப்புக்குரியவர் சிவப்பிரகாச சுவாமிகள். இவர் 17 ஆம் நூற்றாண்டில் சான்றோர் உடைத்து எனப் பாராட்டப் பட்ட காஞ்சி மாநகரில் குமாரசாமி தேசிகருக்கு மகனாகப் பிறந்தவர். இவருக்கு இரண்டு சகோதரர்களும், ஒரு சகோதரியும் உடன்பிறந்தவர்களாவர்.

சிவப்பிரகாச சுவாமிகள் தமிழகத்திலுள்ள மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் அருட்சீடர்களுள் முதன்மையானவர் ஆவார். இவர் இளம் வயதிலேயே கவி பாடும் திறம் பெற்றவர். இவர் எதிர்காலச் சமுதாயத்தை எண்ணியும், சமயநெறி நின்று சமுதாயம் உய்ய வேண்டும் என்னும் பெருநோக்கில் சமயம், தத்துவம், தோத்திரம், புராணம் முதலான பொருண்மை நோக்கில் தனது 32 அகவையில் 34 நூல்களை இயற்றியருளினார் . 34 நூல்களுள் 18 நூல்கள் சிற்றிலக்கியங்கள் ஆகும். இப்பதினெட்டு நூல்களுள் ஏழு நூல்கள் மாலை நூல்களாகும். அவை சோணசைல மாலை, நால்வர் நான்மணி மாலை, இட்டலிங்க அபிடேக மாலை, கைத்தல மாலை, நிரஞ்சன மாலை, பிட்சாடன நவமணி மாலை, சதமணிமாலை என்பன. இவற்றுள் சதமணி மாலைத் தவிர பிற 'ஆறு' மாலை இலக்கியங்களில் காணலாகும் அணிகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**மாலை இலக்கியம்**

சிற்றிலக்கியங்கள் 96 வகை என்ற மரபை முதலில் கூறியது பிரபந்த மரபியல் என்னும் பாட்டியல் நூலாகும். இதனை,

> **"பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத்**
>
> **தொண்ணூற் றாறு என்னும் தொகையதாம்"[1]**

என்ற பாட்டியல் நூற்பாவால் அறியலாம். சிற்றிலக்கியம் பற்றிய தெளிவான இலக்கணத்தை பன்னிரு பாட்டியல் மூலம் அறியலாம். மாலை இலக்கியம் என்பது, ஒரு பொருள் குறித்த பல செய்யுள்களை பல வகைப் பாக்களால் பாடுவதாகும். இவ்விலக்கியம் அந்தாதி அமைப்பில் பாடப்படும். ஒரு மாலையில் பல வகைப் பூக்கள் இருப்பதைப் போல், ஒரு செய்யுளில் பல வகைப் பாக்கள் இருக்கும். அவற்றுள் வெண்பா, ஆசிரிய விருத்தத்தம் என இரண்டு பாவால் பாடப்படுவது இரட்டை மணிமாலை எனவும், மூன்று பாக்களால் பாடப்படுவது மும்மணி மாலை, நான்கு பாவால் பாடுவது நான்மணி மாலை எனவும் அழைக்கப்படுகிறது. மேலும், ஒரே பாவகையாலோ பல பாவகையாலோ ஒன்பது பாடல் பாடப்படுவது நவமணி மாலை எனவும் வழங்கப்பெறுகிறது. இனி சிவப்பிகாசரின் மாலை நூல்களில் காணப்படும் அணிகளைப் பற்றிப் பாடல்களில் காண்போம்.

***1.பிட்சாடன நவமணி மாலையில் அணிகள்***

*'நவம்' என்பது வடமொழிச் சொல். நவம் என்பதற்குத் தமிழில் 'ஒன்பது' என்று பொருள். நவமணிமாலை என்பதற்கு வெண்பா முதலாகிய ஒரு வகைப் பாக்களாலோ, பல வகைப் பாக்கலாளோ பாடப்படும் ஒன்பது பாடல்களைக் கொண்ட இலக்கியம் 'நவமணிமாலை' எனப்படும். இதனை,*

**"வெண்பா முதலா வேறோர் ஒன்பது**

**நண்பாக் கூறல் நவமணிமாலை"[2]**

*என்ற இலக்கண விளக்கம் பாட்டியல் அடிகள் மூலம் அறிய முடிகிறது. இங்கு சிவப்பிரகாசர் எழுதிய பிட்சாடன நவமணிமாலையானது, முன்னாளில் சிவபெருமான் தாருகாவன முனிவர்களின் செருக்கை அடக்கும் பொருட்டுப் பிச்சை கேட்பதன் வாயிலாக அவர்தம் மனைவியரைத் தன்பால் மையல் கொள்ள வைத்து, முனிவர்களின் செருக்கை அடக்கிய புராணச் செய்தியை 9 பாடல்களில் எடுத்துக் கூறும் வகையில் அமைந்துள்ளது. இம்மாலை நூல் நவமணி மாலை இலக்கிய வகையின் முன்னோடியாக விளங்குகிறது.*

***சிலேடையணி***

*செய்யுளில் இடம்பெறும் ஒரு சொல்லோ,தொடரோ தனித்து நின்றும் பிரிந்து நின்றும் பல பொருளைத் தருவது சிலேடையணி அல்லது இரட்டுற மொழிதலணி எனப்படும். இதனை,*

**"ஒருவகைச் சொற்றொடர் பலபொருள் பெற்றி**

**தெரிவுதர வருவது சிலேடை ஆகும்"[3]**

*என்ற தண்டியலங்காரம் நூற்பா வழி அறியலாம்.சிவப்பிரகாசர் தனது பிட்சாடன நவமணிமாலை நூலில் சிலேடை அணியை எவ்விதம் எடுத்தாண்டுள்ளார் என்பதை,*

**"நீருக்குத் தக்க சடையார் முதுகுன்றர் நேடியுங்க**

**ளூருக்குட்பிச்சையென் றுற்றோமுண்டாயி னுரைமினென**

**<u>வாருக்குத் தக்க முலையா ரதற்குளர்</u> மற்றொருவர்**

**யாருக்குக் கிட்டு மதுசோறு நீர்கொளு மென்றனரே"**

*(பிட்சாடன நவமணிமாலை பா.7)*

*என்ற பாடலின் வழி அறியலாம். அதாவது, தனது சடையினிலே அழகிய கங்கையினைப் புனைந்த சிவபிரான், ஊரின்கண் சென்று பிட்சை வேடமேற்று எனக்கு பிட்சையிட யாரேனும் உளரோ என வினவும் போது, அங்குள்ள பெண்டிர் இருக்கின்றனர் எனக் கூறுவதோடு அப்பாக்கியம் யாருக்கு கிட்டும் என்பதை, ''வாருக்குத் தக்க முலையா ரதற்குளர்'' என்ற அடிகள் மூலம் அப்பாக்கியம் சரிந்த முலையுடைய விலைமாதரையோ, கற்பில் சிறந்த குலமாதரையோ சென்றடையும் என்று இருபொருள் படுமாறு பதில் உரைத்தனர். இப்பாடலில் ஒரு சொல் விலைமாதர், குலமாதர் என இருபொருள் குறித்து வருவதால் இது சிலேடையணிப் பொருந்திய பாடல் என்பதை அறிய முடிகிறது. இவற்றைப் போன்றே பாடல் எண் 1-லும் சிலேடையணி பொருந்தி வந்துள்ளது. மேலும்*

*சிலேடையணியைத் தொடர்ந்து பாடல் எண் 6-ல் உவமையணியும் பயின்று வந்துள்ளமையை அறியலாம்.*

### *2. இட்டலிங்க அபிடேக மாலையில் அணிகள்*

*இந்நூல் வீரசைவ சமய வழிபாட்டு நூலாக விளங்குகிறது. இட்டலிங்கமாவது அடியவர் தாம் விரும்பி மார்பில் அணிந்து கொள்ளும் இலிங்கமாகும். இதனை வீர சைவர்கள் மட்டும் மார்பில் அணிந்து இருப்பர். இட்டலிங்கத்தைத் திருமுழுக்காட்டும்போது கூறுவதற்குரிய 10 பன்னிரு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களாலாகிய நூலாக இது விளங்குகிறது. இட்டலிங்கப் பெருமானின் மேனி, பீடம், அடிமட்டம் ஈறாக, நின்மல சாக்கிர அவத்தையின் இயல்பினை விரிவாக இந்நூல் உரைக்கிறது. பாராயணம் செய்வோர் மனத்தை உருக வைக்கும் தோத்திர வழிபாட்டு நூலாக வீரசைவர்களுக்கு இந்நூல் விளங்குகிறது.*

***உவமையணி***

*கவிஞன் தான் கூறக்கருதிய பொருளோடு பிறிதொரு பொருளை ஒப்புமைபடுத்திக் கூறுவது ''உவமையணி'' அணி எனப்படும். இதனை தண்டியரங்காரம்,*

> **"பண்பும் தொழிலும் பயனும் என்று இவற்றின்**
> **ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்த்து**
> **ஒப்புமை தோன்றச் செப்புவதுவமை"**[4]

*என்ற நூற்பா வழி உவமையணியானது பண்பு, தொழில், பயன் போன்றவற்றால் உவமிக்கப்படுகிறது என்பதை விளக்குகிறது. சிவப்பிரகாசர் தனது இட்டலிங்க அபிடேகமாலையில் உவமையணியை எவ்விதம் பயன்படுத்தியுள்ளார் என்பதை,*

> ***"கருச்சி வந்தகடு வருகிப்பொ ருந்தமிளிர்***
> ***களமவாழ்வு மேவவணிவாய்***
> ***<u>கடலிற்சி றந்தநிற வுடலிற்றி ருந்துமணி</u>***
> ***<u>கதிர்போல</u> வேயுநெடுமால்"*** *(இட்டலிங்க அபிடேக மாலை பா.5)*

*என்ற பாடலின் வாயிலாக அறியலாம். அதாவது, உலகெங்கிலும் இருள்மயமாகும்படி கருநிறமாகத் தோன்றி கோபித்தெழுந்து வந்த ஆலகால விடத்தை அருந்தி அனைத்து உயிர்களையும் காத்தவனாகிய சிவபெருமான், கடல்போல் விளங்கித் தோன்றும் நீலநிறமான திருமேனியைக் கொண்டவன், சூரியனைப் போன்ற ஒளியைக் கொண்டவன் என்று ஒப்புமை கூறிப் பாடப்பட்டுள்ளது. இப்பாடலில் சிவனின் உடல் கடலின் நீல நிறத்திற்கும், அவர் அணிந்திருந்த மணியின் ஒளிக்கு சூரியனின் ஒளியையும் உவமையாகக் கூறியமையால் இப்பாடல் உவமையணியைச் சார்ந்தது என்பதை அறிய முடிகிறது. பாடலில் உவமையானது பண்பின் அடிப்படையில் வந்துள்ளது. இந்நூல் தத்துவ நூலாக உள்ளதால் பாடல்களில் கற்பனைகள் குறைந்து காணப்படுதை அறியலாம்.*

***3.கைத்தல மாலையில் அணிகள்***

*இட்டலிங்கப் பெருமான் வீற்றிருக்கும் தம் கைகளைச் சிறப்பித்துப் பாடிய 10 கலித்துறைப் பாடல்களின் தொகுப்பாக இந்நூல் விளங்குகிறது. வீரசைவர்கள் தாம் வழிபடும் இஷ்டலிங்கப் பெருமானைத் தம் கரதலத்தில் எழுந்தருச் செய்து வழிபடுதல் மரபு. அங்கனம் சிவப்பிரகாச சுவாமிகள் இறைவனை வணங்குங்கால், பல புண்ணிய தலத்திற்குச் சென்று வணங்கும் போது கிடைக்கும் பேறானது எனது கைத்தலத்தில் இறைவன் எழுந்தருளியதால் எனக்கு கிட்டியது. இதற்கு எனது கைத்தலம் எத்தகு புண்ணியம் செய்ததோ என வியப்புற்று பாடுகின்றார். இறைவனைக் கைத்தலத்தில் எழுந்தருளச் செய்து பாடுவதால் இந்நூல் ''கைத்தலமாலை'' என்ற பெயர் பெற்றது.*

***உவமையணி - (பல்பொருள் உவமையணி)***

*சிவப்பிரகாச சுவாமிகள் தனது கைத்தலமாலை நூலிலும், இட்டலிங்க அபிடேக மாலை நூலிலும் மிகுதியாக உவமையணியையே பயன்படுத்தி பாடியுள்ளார்கள். கைத்தலமாலையில் உவமையணியை,*

***"அன்னை யாகியின் னுயிர்க்குயி ராம் அருளாளன்***
***<u>பொன்னும் ஆரமு மணியுமா ரமுதமும் போல்வாம்</u>***
***தன்னை நாடொறுங் கண்டுகண் களிப்பதாச் சார்தற்கு***
***என்ன மாதவஞ் செய்த்தோ எனது கைத்தலமே"*** *(கைத்தல மாலை பா.6)*

*என்ற பாடலின் வழி அறியலாம். பாடலின் பொருளானது, ஈன்ற தாயின் அன்புக்கு நிகரான சிவபெருமானே நீ பொன்னிற்கும், முத்திற்கும், ஆபரணத்திற்கும், சுவை நிறைந்த அமுதத்திற்கும் ஒப்பானவனாக உள்ளாய் என்று சிவப்பிரகாசர் எம்பெருமானைப் புகழ்ந்து பாடுகிறார். பாடலில் சிவபெருமானுக்கு ஒப்பாக பொன், முத்து, ஆபரணம், அமுதம் போன்ற பல பொருட்களை உவமையாகக் கூறுவதால் இப்பாடல் பல்பொருள் உவமையணி வகையைச் சார்ந்ததாகும்.*

*பொதுவாக ஒரு பொருளுக்கு ஒரு உவமை கூறுவது பொதுமரபாகும். அப்பொருளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருட்களை உவமையாக மிகைப்படுத்திக் கூறுவது ''பல்பொருள் உவமையாகும்''. இதற்கு மேலும் ஒரு சான்றாக,*

**"கொடியே புனைபூங் கோதாய்**
**நாணின் பாவாய் நீணில விளக்கே**
**கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி"[5]**

*சிலப்பதிகாரத்தின் பாடல் அடிகளையும் கூறலாம். பாடலில் கோவலன் கண்ணகியை வருணிக்கும் போது கொடியாக, பூவாக, விளக்காக, கற்பின் கொழுந்தாக என பல பொருட்களை அவளுக்கு உவமையாக்கி வருணிப்பதால் இப்பாடலும் பல்பொருள் உவமையணியைச் சார்ந்தது என்பதை அறியலாம்.*

*மேலும், கைத்தலமாலையில் பாடல் எண்கள் முறையே 2,9 களில் உவமையணி பயின்று வந்துள்ளமையை அறிய முடிகிறது.*

***4. சோணசைல மாலையில் அணிகள்***

*சிவப்பிரகாசரது படைப்புகளுள் முதலாவதாக அருளப் பெற்ற நூல் சோணசைல மாலையாகும். திருவண்ணாமலையில் எழுந்தருளியுள்ள அருணாச்சலப் பெருமான் மீது இயற்றப்பெற்ற நூலே சோணசைல மாலை ஆகும். மலைவலப் பாராயண நூலாக விளங்குவது இந்நூலின் சிறப்பாகும். ஆசிரியப் பாக்களால் ஆன 100 பாடல்களைக் கொண்ட இந்நூலின் முதல் இரண்டு அடிகள் இறைவனிடம் வேண்டுவதாகவும் பின்னிரண்டு அடிகள் திருவண்ணாமலையின் வளத்தினைக் கற்பனை நயத்தோடு விளக்குவதாகவும் பாடப்பெற்றுள்ளன.*

***உருவக அணி***

*உபமானம், உபமேயம் என்னும் இரண்டுக்கும் வேற்றுமை இல்லாமல் இரண்டும் ஒன்றே என்பது தோன்றக் கூறுவது உருவக அணி ஆகும். இதனை வடநூலார் "ரூபக அணி" என்று கூறுகின்றனர். இதனை,*

**"உருவகம் என்ப உவமை வேறு**

**பொருள்வேறு இன்றிப் புணரத் தொடுத்தலே"[6]**

*என்ற நூற்பா மூலம் தொன்னூல் விளக்கம் உருவக அணிக்கு விளக்கம் தருகின்றது.*

*சிவப்பிரகாச சுவாமிகள் தனது நூலில் உருவக அணியை எவ்விதம் கையாண்டுள்ளார் என்பதனை,*

***"பார்எலாம் இகழும் இகழ்ச்சியும் புகழ்ச்சிப்***

***பயன்என உணர்ந்துநாள் தொறும்ஆ***

***ரூரனார் அவையில் நிகழ்ந்தசொல் துதியின்***

***உவக்கும்நின் பதம்தொழ அருளாய்***

***ஏர்உலாம் அண்டச் சுவர்மதில் மிசைப்பா***

***இலங்குறும் அண்டகோ ளகையாச்***

***சாரும்ஆ லயத்தில் இலிங்கமாம் சோண***

***சைலனே கைலைநா யகனே"*** *(சோணசைல மாலை பா.7)*

*என்ற பாடல்வழி அறியலாம். அதாவது அழகிய அண்டம், திருக்கோயிலின் மதிலாகவும், உச்சி கோயிலின் விமானமாகவும், உலகத்தைக் கோயிலாகவும் உருவகித்து, அக்கோயிலில் எழுந்தருளியுள்ள சோணசைலப்பெருமானே, நாயகனே, உலகில் உள்ளவர் கூறும் இகழ்ச்சியையும் புகழ்ச்சியாக ஏற்றுக்கொண்டவர் நீர், தங்களின் திருவடிகளை வணங்க அருள்புரிவீர்களாக என்று இப்பாடலின் விளக்கம் உள்ளது. இதில்,*

*அண்டம் – மதில்*

*உச்சி – கோயிலின் விமானம்*

*உலகம் – திருக்கோயில்*

மேற்கண்டவாறு உருவகம் செய்யப்பட்டுள்ளதால் இப்பாடலைச் சிவப்பிரகாச சுவாமிகள் உருவக அணியைப் பொருத்தப் பாடியுள்ளார் என்பதனை நம்மால் உணர முடிகிறது. உருவக அணிக்கு மேலும் ஒரு சான்றாக,

**"வையம் தகளியா வார்கடலே நெய்யாக**

**வெய்ய கதிரோன் விளக்காக – செய்ய"[7]**

என்ற முதல் திருவந்தாதி பாடல் மூலம் உலகத்தை அகலாகவும், கடல் நீரை நெய்யாகவும், சூரியனைச் சுடராகவும் உருவகம் செய்திருப்பதை அறியலாம்.

மேலும், பாடல் எண்கள் முறையே 2, 4, 5, 10, 24, 25, 32, 36, 44, 74, 78, 81 போன்ற பாடல்களில் உவமை அணியும், பாடல் எண்கள் முறையே 11, 17, 50, 85, 87 பாடல்களில் உருவக அணியும், தற்குறிப்பேற்ற அணி பாடல் எண்கள் 70, 91 ஆகிய இரண்டு பாடல்களில் பயின்று வந்துள்ளமையை அறியலாம்.

**5.நிரஞ்சன மாலையில் அணிகள்**

நிரஞ்சனம் என்பதற்கு குற்றமற்ற அல்லது 'களங்கமற்ற கடவுள்' என்று பொருள். நிரஞ்சனமாலை என்பது குற்றமற்ற கடவுளுக்காகப் பாடப்படும் பாமாலை என்று பொருள். இட்டலிங்கத்திடம் வேண்டுகோள் விடுப்பதாக 31 கட்டளைக் கலித்துறைப் பாக்களால் ஆனது இம்மாலை இலக்கியம். இடது கையில் இட்டலிங்கத்தை ஏந்திப் பாவனையால்(நினைவால்) நிரஞ்சன லிங்கத்தைப் போற்றும் மரபானது இந்நூலின்கண் பேசப் பெறுகிறது. உலக உற்பத்தி, ஆன்ம ஞானம், வைராக்கிய நிலை முதலியனவற்றோடு தூல, சூக்கும, பாவ இலிங்கங்களின் தன்மை குறித்தும் விளக்கப்பெற்றுள்ளன.

**எடுத்துக்காட்டுஉவமையணி**

உவமையும் உவமேயமும் தனித்தனித் தொடர்களாக வந்து அவ்விரண்டையும் கூட்டுவிக்கின்ற இடைச்சொல்லான உவமஉருபு இவ்விரு தொடர்களின் இடையே வெளிப்படாமல் மறைந்து நின்று பொருள் தருமானால் அஃது 'எடுத்துக்காட்டு உவமையணி' எனப்படும். இதற்கு ச்சான்றாக,

**"தொட்டணைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**

**கற்றனைத் தூறும் அறிவு"[8]**

என்ற திருக்குறள் மூலம், மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும், அதுபோல மக்களின் கற்றக் கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும் என்றவாறு பொருள் கொள்ளப்படுகிறது. இங்கு இரு கருத்துகளுக்கும் இடையில் உவம உருபு வெளிப்படையாக வராமையால் இக்குறள் எ.கா. உவமையணி பயின்று வந்த திருக்குறள் என்பது புலனாகிறது. சிவப்பிரகாச சுவாமிகள் தனது பாடலில் எவ்விதம் இவ்வணியினைப் பொருத்திப்பாடியுள்ளார் என்பதனை,

**"உன்னை எனைவிட்டு அறிவான் தொடர்தல் ஒருவன் நிழல்**

**தன்னை அடியின் மிதிப்பான் தொடரும் தகைமைத்து அன்றோ"**

*(நிரஞ்சன மாலை பா. 3)*

*நிரஞ்சன மாலை பாடல் அடிகள் விளக்குகிறது. இப்பாடலில், என்னுடன் ஒன்றிய உன்னை என்னை வேறாக வைத்து அறியத் தொடர்தல் என்பது, ஒருவன் தன்னுடைய உடல் நிழலைத் தனது அடியினால் மிதிக்கத் தொடரும் தகைமைத்து ஆகும் என்று பொருள் கொள்ளப்படுகிறது. இப்பாடலில் இரு கருத்துகளுக்கும் இடையில் உவம உருபு வெளிப்படையாக வராமையால் இப்பாடல் எ.கா. உவமையணி பயின்று வந்த பாடல் என்பது புலனாகிறது.*

*மேலும், இந்நூலிலுள்ள 31 பாடல்களில் பல அணிகள் விரவியிருந்தாலும் மிகுதியாக உவமையணி பயின்று வந்துள்ளதைக் காணமுடிகிறது. பாடல் எண்கள் 4,5,9,10,13,16,17,28 ல் உவமையணி பயின்று வந்துள்ளதைக் காண முடிகிறது. உவமையணிக்கு அடுத்த நிலையில் பாடல் எண் 25 ல் உருவக அணியும், பாடல் எண் 3 ல் எடுத்துக்காட்டு உவமையணி பயின்று வந்துள்ளதையும் காண முடிகிறது.*

***6.நால்வர் நான்மணி மாலையில் அணிகள்***

*செஞ்சொற் கவியின்பத்திற்கு ஒரு சிறந்த இலக்கியமாகத் திகழ்வது "நால்வர் நான்மணி மாலையாகும்". தமிழகத்தில் சைவ சமய வளர்ச்சிக்கு வித்திட்ட சமயக் குரவர்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்காவாசகர், ஆகிய நால்வருக்கும் நால்வர் நான்மணி மாலை என்ற நூலினை அருளிச்செய்தவர் சிவப்பிரகாச சுவாமிகள். நால்வரின் மீதும் முறையே பத்துப் பத்து பாடல்களாக மொத்தம் நாற்பது பாடல்களைப் பாடியுள்ளார். இந்நூல் வெண்பா, கட்டளைக் கலித்துறை, அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், நேரிசை ஆசிரியப்பா எனும் நால்வகைப் பாக்களால் அந்தாதி யாப்பில் பாடப்பட்டுள்ளது. இந்நூல் பூ என்று தொடங்கி, பூ என்று முடிவது குறிப்பிடத்தக்கது.*

***இலேச அணி***

*ஒன்றினால் ஒன்றை மறைத்துக் கூறுவது "இலேச அணியாகும்".ஒருவர் தன்னிடத்தில் வெளிப்படும் மெய்ப்பாட்டுணர்வினுக்குரிய மெய்யான காரணத்தை மறைத்து அது வேறொன்றால் நிகழ்ந்ததாகக் கூறுவது இலேச அணியாகும். தண்டியார் இவ்வணியை,*

***"குறிப்பு வெளிப்படுக்கும் சத்துவம் பிறிதின்***
***மறைத்து உரையாடல் இலேசம் ஆகும்"***

*என்ற நூற்பா வழி விளக்குவார்.இலேசவணி 2 வகைப்படும். 1. புகழ்வது போல் பழித்தல், 2. பழிப்பது போல் புகழ்தல் என்பனவாகும். சிவப்பிரகாசச் சுவாமிகள் தனது பாடலில் இவ்வணியினை எவ்விதம் அழகுற எடுத்தியம்பியுள்ளார் என்பதனை,*

***"திங்கள் வார்சடைத் தெய்வ நாயக***
***னொருகலை யேனு முணரா னஃதான்று***
***கைகளோ முறிபடுங் கைகள் காணிற்***

**<u>கண்களோ வொன்று காலையிற் காணும்</u>**

**<u>மாலையி லொன்று வயங்கித் தோன்றும்</u>**

**<u>பழிப்பி னொன்று விழிப்பி னெரியும்</u>**

***ஆயினுந் தன்னை நீபுகழ்ந் துரைத்த"*** *(நால்வர் நான்மணி மாலை பா.24)*

*என்ற பாடல் வழி உணரலாம்.இப்பாடலில் சிவபெருமானைப் பழிப்பது போல் மிகுவாகப் புகழ்வதாக மறைத்து பாடப்படுவதால் இது இலேசவணியில் அமைந்த பாடலாகும்.இப்பாடலில் முதல் மூன்று அடிகளில் சிவனைப் பாடிய மாணிக்கவாசகரின் மெய், மொழி, மனங்களைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். பின்னைய அடிகளில் சிவனை இகழ்ந்து பாடியுள்ளார். அதாவது சிவபிரான் திங்களைச் சூடியுள்ளான். அவனுடைய திருக்கைகள் வளைந்த கைகள், ஆராய்ந்து பார்க்கின் ஒரு கண் காலையில் பார்க்கும், மற்றொரு கண் மாலையில் பார்க்கும் பிறிதொரு கண்ணோ (நெற்றிக்கண்) பழிக்கத்தக்கது. ஏனெனில், அதைத் திறந்தால் அனைத்தும் எரிந்து போகும் என்று சிவனின் கண்ணைப் பழிப்பது போல் சுவாமிகள் பாடலில் புகழ்ந்து பாடியுள்ளதால் இது இலேசவணி என்று அறிய முடிகிறது.*

*மேலும் பாடல் எண்கள் 32 8, 11, 12, 13, 30, 18, 40, ஆகிய பாடல்களில் உவமையணி பயின்று வந்துள்ளமையை அறியமுடிகிறது. உவமைக்கு அடுத்த நிலையில் பாடல் எண்கள் 34, 26, 25 முறையே எடுத்துக்காட்டு உவமை அணியும், உருவக அணியும், ஏது அணியும் பொருத்தி சிவப்பிரகாச சுவாமிகள் பாடலில் பாடியுள்ளதை அறிய முடிகிறது.*

**முடிவுரை**

- *பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சிற்றிலக்கிய வேந்தர் சிவப்பிரகாச சுவாமிகள் மாலை இலக்கியங்களான சோண சைல மாலை, நால்வர் நான்மணி மாலை, நிரஞ்சன மாலை, பிட்சாடன நவமணி மாலை, கைத்தலமாலை, இட்டலிங்க அபிடேக மாலை போன்ற சிற்றிலக்கிய மாலை நூல்களில் தனது கற்பனைத் திறனைக் கொண்டு பல்வேறு அணிகளைப் பயன்படுத்தியுள்ளார் என்பதை அறிய முடிகிறது.*
- *கைத்தல மாலையில் 3 உவமையணிகளையும், இட்டலிங்க அபிடேக மாலையில் ஒரு உவமையணியையும் பயன்படுத்திப் பாடியுள்ளார் என்பதை அறிய இயலுகிறது.*
- *பிட்சாடன நவமணி மாலையில் ஒரு உவமையணியும், 2 சிலேடை அணிகளையும் பொருத்திப் பாடியுள்ளார். நிரஞ்சன மாலையில் 8 உவமையணிகளையும், ஒரு உருவகம், ஒரு எ.கா.உவமையணியினையும் அமைத்துப் பாடியுள்ளதைத் தெளியலாம்.*
- *சோண சைல மாலையில் 12 உவமையணிகளையும், 6 உருவகம், 2 தற்குறிப்பேற்ற அணிகளைப் பயன்படுத்தியுள்ளார். நால்வர் நான்மணி மாலையில் 8 உவமையணிகளையும்,*

  *ஒரு உருவகம், ஒரு எ.கா. உவமையணியினையும் பயன்படுத்திப் பாடியுள்ளமையை அறிய முடிகிறது.*

❖ *சிவப்பிரகாசரின் மாலை இலக்கியங்களில் மிகுதியாக உவமையணிகளும், அடுத்த நிலையில் உருவக அணிகளையும், பிற அணிகளை ஆங்காங்கே பாடல்களில் பொருத்திப் பாடியுள்ளமையை இவ்வாய்வின் வழி அறிய இயலுகிறது.*

**சான்றெண் விளக்கம்**

1. *பிரபந்த மரபியல், செ.எ.1*
2. *இலக்கண விளக்கம் பொருளதிகாரம்-பாட்டியல் ப.எ. 837*
3. *தண்டியலங்காரம், நூ.எ.74*
4. *மேலது, நூ.எ.29*
5. *சிலப்பதிகாரம்- கொலைக்கலக் காதை,பா.எ.89-91*
6. *தொன்னூல் விளக்கம்,நூ.எ.341*
7. *பொய்கையாழ்வார்-முதல் திருவந்தாதி,பா.எ.1*
8. *திருக்குறள் எ.396*
9. *தண்டியலங்காரம், நூ.எ.63*

**துணைநின்ற நூல்கள்**


1. ***தண்டியாசிரியர் - தண்டியலங்காரம், (உ.ஆ. இராமலிங்கத் தம்பிரான் குறிப்புரை)*** *திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – 18, 1938.*
2. ***திருஞானசம்பந்தம்.ச. – தண்டியலங்காரம் தெளிவுரை****, கதிர் பதிப்பகம், திருவையாறு, 2006.*
3. ***சிவப்பிரகாசர் – சோணசைலமாலை,*** *(உ.ஆ. முனைவர். க.விநாயகம், முனைவர்.மா.சற்குணம்), மயிலம் பொம்மபுர ஆதீனம், மயிலம், பொம்மையபாளையம், 2003.*
4. ***சுந்தரமூர்த்தி.இ – திருக்குறள் அணிநலம்,*** *சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை,1971.*
5. ***சிவப்பிரகாச சுவாமிகள் - ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் செந்தமிழ் நூல்கள்****, மயிலம் பொம்மபுர ஆதீனம் வெளியீடு-2004.*
6. ***சிவப்பிரகாச சுவாமிகள் - நிரஞ்சன மாலை****, மயிலம் பொம்மபுர ஆதீனம் வெளியீடு-2016.*
7. ***தனலட்சுமி. அ - சிலப்பதிகாரத்தில் அணிக்கோட்பாடு****, பண்புநூல் வெளியீட்டகம், தஞ்சாவூர், பதிப்பு – 2005.*
8. ***சுப்பிரமணியன், ச.வே - தொன்னூல் விளக்கம்,*** *தமிழ் பதிப்பகம், சென்னை, பதிப்பு – 1978.*

9. **சிவப்பிரகாச சுவாமிகள் – பிட்சாடன நவமணி மாலை**, *மயிலம் பொம்மபுர ஆதீனம் வெளியீடு -1996.*

10. **சிவப்பிரகாச சுவாமிகள் – இட்டலிங்க அபிடேக மாலை**,*(உ.ஆ.குமாரசாமி ஐயர்), மயிலம் பொம்மபுர ஆதீனம் வெளியீடு -2020.*

11. **சிவப்பிரகாச சுவாமிகள் – கைத்தல மாலை**, *மயிலம் பொம்மபுர ஆதீனம் வெளியீடு -1969.*

12. **சிவப்பிரகாச சுவாமிகள் – நால்வர் நான்மணி மாலை**, *மயிலம் பொம்மபுர ஆதீனம் வெளியீடு -2005.*